# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : C.C.53/2023 Date: 07.02.2025

Deposition of Witness for : **அ.சா.1**

Name : **சுப்ரமணி**

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணை :-**

1) அ.சா.4 பெருமாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் மைத்துனர் ஆகும். பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் நிலத்திற்கு வடக்கு புறம் பழனிசாமியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். பழனிசாமியின் நிலத்திற்கு வடபுறம் தான் எதிரியின் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி, எதிரியின் நிலத்திற்கும், என்னுடைய நிலத்திற்கும் சுமார் 100 அடி துாரம் இருக்குமா என்றால் சுமார் 50 அடி துாரம் இருக்கும்.

2) பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் குடியிருப்புகள் உள்ளதா என்றால் இல்லை. எனது நிலத்தை சுற்றி கம்பி வேலி போட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிரி 03 அடி தடத்தை நிரவியதாக கூறியுள்ள நிலையில், 03 அடி தடம் இருப்பதாக ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் இடம் பட்டா நிலம் என்றால் சரிதான்.

3) எதிரி அவசர நிமித்தமாக மருத்துவமனைக்கு அல்லது வெளியூருக்கோ செல்ல வேண்டும் என்றால் 03 கி.மீ துாரம் நடந்து சென்றால் தான் பிரதான சாலைக்கு வரமுடியும் என்றால் நானும் அவ்வாறு தான் செல்ல முடியும். கல்லுக்குழியில் இருந்து எனது வீடு வரை சுமார் 12 அடி அகலமுள்ள வண்டித்தடம் உள்ளது என்றும், அதில் எதிரி செல்வதை நான் தடுத்துள்ளேன் என்றால் நான் தடுக்கவில்லை, எனக்கும் மேற்படி தடம் இல்லை. சுமார் 12 அடி அகலமுள்ள வண்டித்தடம் பாத்தியம் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) மேற்படி, தடம் சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை. என்னுடைய மகள் பொன்னம்பாளையத்தில் உள்ள சிவசாமி என்ற மருத்துவரிடம் நர்ஸ்-ஆக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கும், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கும் சுமார் 02 கி.மீ இருக்குமா என்றால் 05 கி.மீ இருக்கும். என்னுடைய வீட்டிற்கும், பவானி மருத்துவமனைக்கும் சுமார் 15 கி.மீ இருக்குமா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை.

5) பவானி மருத்துவமனைக்கு என்னை எனது மகன் இருசக்கர வாகனத்தில் வைத்து அழைத்து சென்றார் என்றால் இல்லை, ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனை சென்றேன். வீட்டில் இருந்து ஆம்புலன்ஸ் வருவதற்கு 03 கி.மீ துாரம் வரை வழி இல்லை என்றும், அதனால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய நிலத்திற்கு இரண்டு நிலம் தள்ளி தடம் உள்ளது, அங்கு ஆம்புலன்ஸ் வந்தது. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் அரை மணி நேரம் இருக்கும்.

6) பவானியில் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் ஜோதிகுமார் என்ற தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் அது தெரியவில்லை. சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால் காலை சுமார் 09.00 மணிக்கு நடைபெற்றது. சம்பவத்திற்கு பின்னர் எனக்கு மயக்கம் ஏற்பட்டதா என்றால் ஆமாம். அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டேனா என்றால் ஆமாம். அவசர சிகிச்சை பிரிவில் சுமார் எவ்வளவு நாட்கள் இருந்தேன் என்றால் சுமார் 15 நாட்கள் இருந்தேன். மேற்படி, 15 நாட்களும் நான் மயக்கத்தில் இருந்தேனா என்றால் ஆமாம். மேற்படி, 15 நாட்களும் மருத்துவரை தவிர வேறு யாரும் என்னை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

7) போலிசார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்றால் பிரச்சனை ஏற்பட்டு 05 அல்லது 06 நாட்கள் கழித்து போலிசார் மருத்துவமனை வந்தார்கள், அவர்களை மருத்துவமனையில் என்னை பார்க்க அனுமதிக்கவில்லை, பின்னர் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க என்னை பார்க்க போலிசாரை மருத்துவர்கள் அனுமதித்தார்கள். அன்று விசாரித்தபிறகு, போலிசார் என்னை மீண்டும் விசாரித்தார்களா என்றால் இல்லை.

8) என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாளுக்கு முதல்நாள் நான் நிலத்தில் உழுது கொண்டிருந்தபோது ஒரு பெரிய காளை மாடு என்னை கீழே தள்ளி காலால் எனது வலது தோள்பட்டையில் மிதித்துவிட்டது என்றும், அதனால் எனக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

9) அன்றைய தினமே, நான் எனது மகள் நர்ஸ்-ஆக பணிபுரிந்து வரும் பொன்னம்பாளையத்தில் உள்ள சிவசாமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றால் இல்லை. சிவசாமி மருத்துவமனை மருத்துவர் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதால் மேல்சிகிச்சைக்காக என்னை பவானியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் சங்ககிரி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.சண்முகநாதன், எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு உறவுமுறை இல்லை, என்னுடைய சம்பந்தியின் உறவினர் ஆகும். சம்பவ இடத்தை போலிசார் வந்து பார்த்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

10) எதிரிக்கு நான் 05 செண்ட் நிலத்தை ஒப்பந்தப்படி எழுதி கொடுக்காமல் உள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு கண்பார்வை குறைபாடு உள்ளது என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் எனக்கு நுரையீரல் எலும்பில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை, மருத்துவர் தான் போலிசாரிடம் சொன்னார். போலிசார் விசாரணையில் அ.சா.3 செந்தில் என்பவரும், சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

11) சம்பவத்தின்போது நானும், எனது மகனும் மட்டும் தான் சம்பவ இடத்தில் இருந்தோம் என்றால் செந்தில் என்பவர் அவருடைய நிலத்தில் இருந்தார். என்னுடைய புகார் வாக்குமூலத்திலும், போலிசார் என்னை விசாரித்தபோது டிராக்டர் கலர் சிவப்பு என்றும், அதன் பதிவு எண்ணையும் கூறியுள்ளேனா என்றால் இல்லை. டிராக்டரை யார் எடுத்து சென்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் டிராக்டரை அவருடைய நிலத்தில் இருந்து காவல் உதவி ஆய்வாளர்

திரு.சண்முகநாதன், எடுத்து சென்று என்னுடைய நிலத்தில் வைத்து புகைப்படம் எடுத்து இந்த வழக்கை ஜோடித்துள்ளார் என்றால் சரியல்ல.

12) நான் சிகிச்சை பெற்ற பவானி தனியார் மருத்துவமனையில் எனது அத்தை மகன் விஜய் என்பவர் பணிபுரிகிறார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரி டிராக்டரை ஓட்டி என்மீது மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாடு மிதித்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிமீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.

Sd/-Subramani

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : C.C.53/2023 | Date: 07.02.2025 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | |
| Name | : **தனசேகரன்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

<u>(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

<u>**குறுக்கு விசாரணை** :-</u>

1) எதிரியின் நிலத்திற்கும், எங்களுடைய நிலத்திற்கும் சுமார் 100 அடி துாரம் இருக்குமா என்றால் இருக்கும். கல்லுக்குழி இடத்தில் இருந்து எங்கள் வீடு வரை 12 அடி அகலமுள்ள வண்டித்தடம் வருகிறது என்றால் வருகிறது, ஆனால் மேற்படி தடத்தில் பாதி வரை தான் எங்களுக்கு தட பாத்திய உரிமை உள்ளது. எதிரி அவசர நிமித்தமாக மருத்துவமனைக்கு அல்லது வெளியூருக்கோ செல்ல வேண்டும் என்றால் 03 கி.மீ துாரம் நடந்து சென்றால் தான் பிரதான சாலைக்கு வரமுடியும் என்றால் நாங்களும் அவ்வாறு தான் செல்ல முடியும்.

2) நாங்கள் குடியிருக்கும் இடத்திற்கு கார் போன்ற வாகனங்கள் வரமுடியாது என்றால் சரிதான். நாங்கள் வெண்டைக்காய் பயிரிடப்பட்டிருந்த இடம், எதிரி உழுது கொண்டிருந்த நிலம் ஆகியவை தனித்தனியாக கிரையம் பெற்ற நிலம் என்றால் சரிதான். எதிரி 03 அடி தடத்தை நிரவியதாக கூறியுள்ள நிலையில், 03 அடி தடம் இருப்பதாக ஆவணங்கள் எதையும் போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால்

இல்லை. என்னுடைய தங்கை பொன்னம்பாளையத்தில் உள்ள சிவசாமி என்ற மருத்துவரிடம் நர்ஸ்-ஆக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான்.

3) பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் நிலம் பட்டா நிலம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் என்னவென்றால் காலை சுமார் 10.00 மணி. சம்பவம் சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றதா என்றால் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. என்னுடைய வீட்டிற்கும், எடப்பாடி அரசு மருத்துவமனைக்கும் சுமார் 05 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். என்னுடைய வீட்டிற்கும், பவானி மருத்துவமனைக்கும் சுமார் 25 கி.மீ இருக்குமா என்றால் இருக்கும். தூரமாக உள்ள மருத்துவமனைக்கு செல்லவேண்டிய காரணம் என்றால் அங்கு மருத்துவமனையில் போதிய வசதிகள் இருந்ததால் சென்றோம்.

4) எனது தந்தையை இருசக்கர வாகனத்தில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை, ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றேன். பவானி மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் காலை 11.30 மணிமுதல் 12.00 மணிக்குள் கொண்டு சென்றேன். மருத்துவமனைக்கு போகும்போது எனது தந்தை மயக்க நிலையில் இருந்தாரா என்றால் ஆமாம். தீவிர சிகிச்சை பிரிவில் எனது தந்தை எத்தனை நாட்கள் இருந்தார் என்றால் சுமார் 15 நாட்கள் இருந்தார். தீவிர சிகிச்சை பிரிவில் மருத்துவரை தவிர வேறு யாரும் எனது தந்தையை பார்க்க அனுமதிக்கவில்லை என்றால் சரிதான்.

5) சம்பவம் குறித்து நான் தேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் ஆமாம். சங்ககிரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.சண்முககுமாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கொடுத்த புகாரின்

அடிப்படையில் காவல் ஆய்வாளரும்,மேற்படி, சண்முககுமாரும் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் ஆமாம். டிராக்டரை சம்பவ இடத்தில் இருந்து யார் எடுத்து சென்றார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை.

6) சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நாளுக்கு முதல்நாள் எனது தந்தை நிலத்தில் உழுது கொண்டிருந்தபோது ஒரு பெரிய காளை மாடு அவரை கீழே தள்ளி காலால் அவரது வலது தோள்பட்டையில் மிதித்துவிட்டது என்றும், அதனால் அவருக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றும், அதனால் எனது தங்கை வேலை செய்யும் சிவசாமி மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தேன் என்று சொன்னால் சரியல்ல.

7) சிவசாமி மருத்துவமனை மருத்துவர் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டதால் மேல்சிகிச்சைக்காக அவரை பவானியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார் என்றால் சரியல்ல. எனது தந்தையை போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் இரண்டு நாட்களில் வந்து பார்த்தார்கள், அப்போது எனது தந்தை பேச முடியாமல் இருந்தார், பின்னிட்டு 04 அல்லது 05 நாட்கள் கழித்து போலிசார் வந்து எனது தந்தையை விசாரித்து கையொப்பம் வாங்கி சென்றார்கள்.

8) அதன்பிறகு, எனது தந்தையை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனது தந்தையை விசாரித்தபோது என்னையும் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்தபோது எனது தந்தைக்கு நெஞ்சில் மூன்று எலும்பு முறிவும், நுரையீரலில் இரண்டு எலும்பு முறிவும் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ராஜஸ்ரீ மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சையில் இருந்த

பின்னர் மூச்சு விடுவதற்க்கு சிரமமாக இருந்ததால் அவரை மேல்சிகிச்சைக்காக ஈரோடு மணியன் மருத்துவமனையில் சேர்த்தேன் என்று போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன்.

9) என் அப்பாவின் மீது மோதிய டிராக்டர் வாகனம் சிகப்பு கலர் மகேந்திரா-595 என்று போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொல்வதுபோல், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரி டிராக்டரை ஓட்டி எனது தந்தையின்மீது மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாடு மிதித்து ஏற்பட்ட காயத்தை வைத்து உதவி ஆய்வாளர் திரு.சண்முககுமார், ஆதரவுடன் எதிரிமீது பொய் புகார் கொடுத்து தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) எதிரிக்கு நாங்கள் 05 செண்ட் நிலத்தை ஒப்பந்தப்படி எழுதி கொடுக்காமல் உள்ளோம் என்றும், பொய் புகார் கொடுத்தால் பின்னர் அவர் நிலத்தை கேட்கமாட்டார் என்று பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd/-S.R.Babu,<br>Judicial Magistrate No.I,<br>Sankari.

Sd/-Dhanasekaran

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | C.C.53/2023 | Date: 07.02.2025 |
| Deposition of Witness for | : | **அ.சா.3** | |
| Name | : | **செந்தில்** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).**

<u>(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).</u>

<u>**குறுக்கு விசாரணை :-**</u>

1) நான் குடியிருக்கும் இடம் சென்டன்காடு என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும், சுப்பிரமணி குடியிருக்கும் இடத்திற்கும் சுமார் 02 கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் தண்ணீர் கேன் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தினமும் காலை 08.00 மணிக்கு வேலைக்கு சென்றால் மீண்டும் இரவு 09.00 மணிக்கு தான் வீடு திரும்புவேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல, எனது நிலத்தில் பருத்தி பறித்துக் கொண்டிருந்தேன்.

2) சுப்ரமணி நிலத்திற்கும், என்னுடைய நிலத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அடுத்தடுத்த நிலம். நான் சொல்வது போல் சுப்பிரமணி நிலத்திற்கு அருகில் என்னுடைய நிலம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த பிறகு நான் சென்று பார்த்தேன் என்றால் டிராக்டர் மோதிய பிறகு பார்த்தேன். சுப்ரமணி நிலத்திற்கும், எதிரி நிலத்திற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்குமென்றால் சுமார் 20 அடி தூரம் இருக்கும்.

3) எதிரி அவருடைய நிலத்தில் டிராக்டர் ஓட்டிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். எதிரியின் வீட்டில் இருந்து, மருத்துவமனைக்கோ

அல்லது வெளியூருக்கோ செல்ல வேண்டுமென்றால் சுமார் 03 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டுமென்றால் சரிதான். கல்லுக்குழியிலிருந்து, சுப்ரமணி வீடு வரை சுமார் 12 அடி அகலம் உள்ள தடம் உள்ளது என்றும், அதில் அவர்கள் சென்று வருகிறார்கள் என்றும் சொன்னால் சரிதான், ஆனால் பாதி வரை தான் அவர்களுக்கு தடபாத்திய உரிமை உள்ளது.

4) எதிரி மேற்படி, தடம் வழியாக செல்வதை சுப்ரமணி தடுத்துவிட்டார் என்றால் மற்றவர்களும் தடுத்துவிட்டதால் அவர் தடுத்துவிட்டார், மற்றவர்கள் அனுமதித்தால் அவரும் அனுமதிப்பார். சுப்ரமணியை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் இல்லை. சம்பவத்திற்கு முதல் நாள் சுப்ரமணியை காளை மாடு மோதி கீழே தள்ளி அவருடைய தோள்பட்டையில் மிதித்து அவருக்கு காயம் ஏற்பட்டதால் அவரை அவருடைய மகள் வேலை செய்யும் சிவசாமி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அவருக்கு சிகிச்சை அளித்தார்கள் என்றால் இல்லை.

5) இந்த வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் அங்கு இல்லை என்றும், தண்ணீர் கேன் விற்பனைக்கு சென்றுவிட்டேன் என்றும், சுப்பிரமணி எனது சித்தப்பா என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்காக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-Senthil

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.